(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **82**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 யூலை 05, செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மங்கள சமரவீர,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேணாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டாற ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திரண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்*:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்:-

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்ட "ஓமியோபதி" எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், விதந்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மனுதாரர் மனுவை தாக்கல்செய்வதற்கு தவறியுள்ளதால் உயர் நீதிமன்றம் இந்த மனுவை நிராகரிப்பதாகவும் அது தொடர்பாக தீர்ப்பொன்றை வழங்குவதில்லை எனவும் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடுமாறு நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் ஆட்ச்சேபனைக்கு உட்படுத்தப்பட்ட, "நிதி முகமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்)" எனும் சட்டமூலம் பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச் சட்டமூலமோ இச் சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடுகளுமோ அரசியலமைப்புக்கு முரணாணது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார

அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**III**

"அண்மையில் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி முறிகள் விநியோகம் பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எனக்களிக்கப்பட்ட முழு விபரங்கள் மற்றும் சுருக்க அறிக்கைகள் சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள பற்றியும், அதன் இரகசியத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில், நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கான மேலதிக அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் சட்ட மா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி ஆளுநருடன் கலந்துரையாடுவதற்கு நான் எண்ணியுள்ளேன்.

ஏற்கெனவே, இது இது சம்பந்தமாக பொது வியாபாரம் பற்றிய குழுவின் தவிசாளரையும் அழைத்து கலத்துரையாடப்பட்டதுடன், அது சம்பந்தமாக தெரிவுக்குழுவினால் தற்பொழுது நடத்தப்பட்டுவரும் பரிசீலனை நடவடிக்கைகளும் தடையின்றி ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுமெனவும் இத்தகைய உயர்சபைக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், பொருளாதாரம் தொடர்பான காலாண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை சபாபீடத்திலிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான சமூக சேவைகள் திணைக்களத்தின் செயற்பாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைத் தாபிப்பது தொடர்பில் ஆக்கப்பட்டு 2016 மார்ச்சு 29 ஆம் திகதிய 1960/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினைத் தாபிப்பது தொடர்பில் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 19 ஆம் திகதிய 1954/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;மற்றும்

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)

ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமித்து 2016 மே 30 ஆம் திகதிய 1969/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படிப் பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகிய அறிக்கைகளைச் சமர்ப்பித்து அரச நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையினை வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** கௌரவ பிரேமலால் ஜயசேக்கரவினால் "ஹொமியோபதி" எனும் சட்டமூலம் பற்றி சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமென கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) அநுராதபுரம், III ஆம் கட்டம், இல. 2245/ஏ 2 இல் வதியும் திரு. ஐ.எம். காமினி சந்திரசிரியினது 2016.03.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பி. ஹரிஸன் சமர்ப்பித்தார்.

(2) கோனகலபுர, கல்துடுவவில் வதியும் திரு. சீ.வீ. லொகுசூரியவினது

2016.05.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கயந்த கருணாதிலக்க சமர்ப்பித்தார்.

(3) (i) கொலம்பகேஆர, மிரிஸ்வெல்பொலவில் வதியும் திரு. பி.எம்.கே. கமகேயினது 2016.04.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) நிவிதிகல, யக்தெஹிவத்தவில் வதியும் திரு. எஸ்.ஏ.ஆர்.எம். சோலங்கஆரச்சியினது 2016.01.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தலதா அதுகோரல சமர்ப்பித்தார்.

(4) மாதம்பே, இஹலகமவில் வதியும் திரு. எச்.ஆர். லலித் மொஹானினது 2016.05.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பியங்கர ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(5) யாழ்ப்பாணம், பெங்சோல் வீதி, இல. 225 இல் வதியும் திரு. ஜி. எமலியனினது 2016.05.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பிமல் ரத்னாயக்க சமர்ப்பித்தார்.

(6) கல்அத்தர, அஸ்மடல, இல. 62 இல் வதியும் திரு. எச்.ஜி.டப்ளியூ. கல்தேராவினது 2016.01.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தித் சமரசிங்க சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்):** உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சார்பாக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 யூலை மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்வதற்கும் அதனை அச்சிடுவதற்கும் மற்றும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தவதற்கும் கட்டளையாயிற்று.

**6. விலங்குத் தீனி (திருத்தம்):** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 யூலை மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்வதற்கும் அதனை அச்சிடுவதற்கும் மற்றும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தவதற்கும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2016, யூலை மாதம் 07ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஹோமியோபதி சட்டமூலம்:** ''சட்டமூலம் தற்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 2.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தமைமை தாங்கினார்.)

“கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.10 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.12 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

“கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்குவாராக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.25 மணிக்கு கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்கினார்.)

“சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்.

2 ஆம் பக்கத்தில் 13 ஆம் மற்றும் 14 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் நான்காம் வரியைநீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்வருவனவற்றை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

‘‘ஐந்து உறுப்பினர்கள்; ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

‘‘4(I) அமைச்சரானவர் விசாரணையின் பின்னர்

குறித்தொதுக்கபப்பட்ட ஏதுக்களின்மீது" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 முதல் 14 வரையான வாசகங்கள்ஏற்றுக்கொள்ளப்பட்டடன.

15 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''முறைமைக்கிணங்க சிகிச்சையை வழங்குகின்ற'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரி முதல் 17 ஆம் வரி வரையிலான (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

''(ஈ) (i ) இச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக ஆகக் குறைந்த நியமங்கள் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளால் அல்லது நிறுவனங்களினால் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அத்தகைய கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றை அத்துடன்

(ii ) பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவ தொழிலரினால் மட்டும் ஓமியோபதி தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர் எனவும், அத்தகைய நிறுவனங்கள் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த நியமங்களிற்கு அமைந்துள்ளன எனவும் உறுதிப்படுத்துவதற்காக ஓமியோபதி தொழிலை மேற்கொள்ளும் நிறுவனங்கள் என்பவற்றை,

மேற்பார்வை செய்து, பதிவு செய்து, பரிசோதித்து, பரிசோதனை செய்து மற்றும் புலனாய்வு செய்வதற்கென மருத்துவ பரிசோதகர்களை நியமித்தல்; '' ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 7 ஆம் மற்றும் 8 ஆம் வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"மற்றும் வேறு வசதிகள் தொடர்பாக ஆகக்குறைந்த நியமங்கள் உட்பட, மருத்துவக் கல்வியினதும் ஓமியோபதி தொழிலினதும் ஆகக்குறைந்த நியமங்களை விதித்துரைத்தலும்" ;

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியினை உடனடுத்து பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(ஞ) பேரவையானது அவசியமானதென கருதுகின்றவாறு அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய காலத்திற்குக் காலம் எவரேனும் அலுவலருக்கு அல்லது குழுவிற்கு ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை கையளித்தல்; " ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(ii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து அத்தகைய பணியாட்டொகுதியின் வேதனங்கள், " ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் வாசகம்

13 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(அ) குறித்தளிக்கப்பட்ட காரணங்கள் மூலம் முன்னரே பதவி அகற்றப்பட்டிருந்தாலொழிய ஐந்து வருட காலப்பகுதியொன்றுக்கு பேரவையின் செயலாளராக செயலாற்ற வேண்டிய" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 27 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"19 ஆம் பிரிவின் கருத்துக்குட்படப் பகிரங்க சேவையாளர்களெனக்" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரி முதல் 25 ஆம் வரி வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரி முதல் 28 ஆம் வரி வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரி முதல் 8 ஆம் வரி வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 முதல் 30 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

31 ஆம் வாசகம்

28 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"(4 ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எது எப்படியாயிருப்பினும், இலங்கைப் பிரசை ஒருவராக அல்லாத ஆளொருவர் 31 ஆம் பிரிவின் வேறு ஏற்பாட்டிற்கு அமையவும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையவும் அத்தகைய காலப்பகுதிக்கு தற்காலிகமாக பதிவு செய்யப்படலாம். ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 முதல் 39 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

40 ஆம் வாசகம்

32 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரி முதல் 29 ஆம் வரி வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> "பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டு காலப்பகுதியை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 முதல் 48 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

49 ஆம் வாசகம்

39 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> "மருத்துவக் கல்வி மற்றும் ஓமியோபதித் தொழிலுக்கான ஆகக் குறைந்த நியமங்கள்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

50 மற்றும் 51 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

52 ஆம் வாசகம்

41 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவதனை சேர்க்கவேண்டுமென சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

> "(உ) நீக்கப்பட்ட, சட்டத்தின் கீழ் பேரவைக்கென நியமிக்கப்பட்டவரும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதிவு வகிக்கின்றவருமான ஒவ்வொரு அலுவலரும் சேவையாளரும் இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதே நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும்; ";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

53 முதல் 55 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

சட்டமூலம் அதற்கமையச் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்):** ‘‘இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக’’ என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 6.15 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

“கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக” என கௌரவ நிஹால் கலப்பத்தி பிரேரித்தார், கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 6.26 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.05 மணிக்கு, இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 யூலை 07 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.